புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

===========================================================================

# *சங்க அகப்பாடல்களில் களவுப்புணர்ச்சி*

===========================================================================

**ஆய்வாளர்**
*ஜெபா ஷாலினி. வி*
*பதிவு எண்:19213114022029,*
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை.*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,*
*மார்த்தாண்டம் - 629165,*
*கன்னியாகுமரி மாவட்டம்.*

**நெறியாளர்**
**முனைவர். அ சஜன்**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,*
*மார்த்தாண்டம்,*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,*

*திருநெல்வேலி.*

===========================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்ககால சமுதாயத்தில் ஐவகை திணை சார்த்த மக்கள் வாழ்ந்து வந்தனர். அகப்புற பிரிவினடிப்படையில் பிரிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை காதல், வீரம் குறித்துப் பேசுகின்றன. சங்க அகப்பாடல்கள் மையப்படுத்திய ஆண், பெண்ணின் அக வாழ்க்கையை விரிவாக முன்வைக்கிறது. புறம் சார்ந்த கடமைகளில், ஆண் முதன்மையாகவும், அக வாழ்வு பெண்ணை மையமிட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றன. களவு, கற்பு வாழ்வில் ஆண் பெண் உறவானது, பெண் ஆணின் வாழ்க்கைக்காக கட்டமைக்கப்பட்ட நிலையைக் காண முடிகிறது. பெண்ணின் விருப்புகள் அனைத்தும் ஆண் சார்ந்த வட்டத்திற்குள் மையப்படுத்தப்பட்டுள்ளது. பெண்ணின் மன உணர்வுகள் ஆண் சார்ந்து காணப்பட களவு வாழ்வு காரணமென்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.களவு வாழ்வில் அடிவைக்கும் பெண்ணின் வாழ்வில் இன்றியமையாதது பருவமெய்துதல் ஆகும். பருவமெய்திய வளர்பருவ பெண் தாய், தந்தை ஏவற்படி*

*புனங்காத்தல், பூக்கொய்தல் முதலிய காரணங்களுக்காக தோழியுடன் புறத்துச் செல்கின்றாள். வேட்டையாடுதல், புறக்காரணங்களுக்காக உலாவும் காமபருவமெய்திய ஆண் சந்திக்கும் நிலையில் இயற்கைப்புணர்ச்சி நிகழுகிறது. பார்வைக் குறிப்பால் ஒருவரையொருவர் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றனர். உள்ளத்தால் விரும்பிய தலைமக்கள் தோழி, பாங்கன் துணையுடன் பகல் இரவுக் கூட்டம் நீள்கிறது. களவு இன்பமே வரைவு வாழ்க்கைக்கு காரணமாகவும் அமைகிறது. உள்ளப்புணர்ச்சியால் கூடிய தலைமக்கள், மெய்யுறுப்புணர்ச்சியை விரும்பி உடன்படுகின்றனர் . இதுவே வரைவு வாழ்க்கைக்கு காரணமாவும் அமைகிறது என்பது இக்கட்டுரையின் தன்மையாகும்.*

***முன்னுரை:***

*பழந்தமிழ் இலக்கியங்களில் காலத்தால் அழியாது இன்றும் நிலைப்பெற்று நிற்கும் சங்கஇலக்கியங்கள் அகம் புறம் குறிந்து விரிவாகப் பேசுகின்றன. ஆண் பெண் வாழ்வை பண்பாட்டு நடத்தை முறைகளுடன் காதலை முன்வைத்துப் பேசும் சங்கஅகப்பாடல்கள் களவில் வளர்பருவப்பெண்களின் மன உணர்வை அதிகமாக வெளிப்படுத்துகின்றன. களவில் ஆண் பெண் வாழ்க்கை முறை ஒரே நிலையில் காணப்படவில்லை. சங்ககாலம் பொற்காலம் என்றச் சொல்லிற்கு ஏற்றாற் போல் பெண்களின் வாழ்க்கை அமைந்திருந்ததா? களவில் பெண்ணின் மன உணர்வு எவ்வாறு வெளிப்பட்டது? காதல் மிக்க இன்புற்ற வாழ்வை தங்களுக்காக வாழ்ந்தனரா? என்ற பல கேள்விகளை முன்வைத்து களவுப்புணர்ச்சி குறித்து ஆய்வது அவசியமானது. பெண் சமூகம் சார்ந்த ஒவ்வொரு செயல்பாடுகளும் ஒரு வளையத்திற்குள் கட்டமைக்கப்பட வேண்டிய அவசியமென்ன. சங்க அகப்பாடல்கள் கூறும் களவு வாழ்வில் புணர்ச்சி எவ்வாறு தலைமக்களிடையே முக்கியத்துவம் பெறுகிறது. இது வரைவிற்கு காரணமாக அமைந்ததா என்பதை கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.*

***களவுக்காதல் – காரணம்***

*பருவமெய்திய பெண் தாய், தந்தை ஏவற்படி புனங்காத்தல், மீன் உணக்கல் போன்ற காரணங்களுக்காகப் புறத்துச் செல்கிறாள். செவிலியின் மகளாகிய தோழியும் உடன் செல்கிறாள். இவைத்தவிர பூஞ்சோலை, பொழில், கடற்கரைச்சோலைகளிலும் பூக்கொய்யவும் சென்று வந்தனர். இந்நிலையில், காமபருவமெய்திய ஆண் வேட்டையாடுதல் பொருட்டாக அவ்விடத்து தானாகவே வருகிறான். இங்கு விதியால் கூட்டப்பெற்ற இயற்கைப்புணர்ச் சி நிகழ்கிறது. யாருடைய துணையுமின்றி கூட்டப்பெற்ற தலைவன் தலைவி ஒருவரையொருவர் சந்தித்தல் மூலம் களவு வாழ்வு துவங்குகிறது.*

***களவுப் புணர்ச்சி***

*ஒருவரையொருவர் பார்வைக் குறிப்பால் அறிந்த தலைவன் தலைவி சந்தித்துக்கொள்வதை ‘களவுப்புணர்ச்சி’ எனலாம்.*

*'உள்ளப் புனர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்*
*கள்ளப் புணர்ச்சியுள் காதலர்க்கு உரிய' [ நம்பி .அகம் 34 ]*

*உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுப் புணர்ச்சி இருவகை எனக் களவுப் புணர்ச்சியை அகப்பொருள் வகைப்படுத்துகின்றது. தொல்காப்பியரும் காமப்புணர்ச்சி, இடர்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியற்கூட்டம் என நான்காக குறிப்பிட்டுள்ளார். களவு கால மெய்பாடுகளாக. புதுமுகம்புரிதல் முதற்கொண்டு கையறவுரைத்தல் வரை 24 மெய்பாடுகளை, விளக்கியுள்ளார்.*

***உள்ளப்புணர்ச்சி***

*பார்வைக் குறிப்பால் ஒருவரையொருவர் விருப்பத்தை வெளிப்படுத்திய தலைவன் தலைவி உள்ளத்தால் இணைவது உள்ளப்புணர்ச்சி எனலாம்.*

*பூக்கொய்யும் போது 'புலிப்புலி' என ஆரவரித்துக் கொண்டு புலி இவ்வழி போகியதோ என வினவி வந்த ஆண் ஒருவனுக்கு மறுமொழியுரைக்காது அச்சத்துடன் நின்றப் பெண்களை எதிர்மறுத்து பலமுறை நோக்கிச் செல்கிறான். களவில் 'காண்டல்' மூலமே காதல் அரும்புகிறது. இருவரும் ஒருவரையொருவர் நோக்க காதல் கொண்டதை (குறு 305) குறிப்பிடுகின்றது. களவிற்கும் காமத்திற்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. 'காமமே காதல், காமத்தோடு சேர்ந்த விருப்பே காதல்' ஆகும். களவுக்காதல் ஒத்தப்பருவத்தினரிடையே வெளிப்படுத்தலையும், காமமற்ற விருப்பம் அன்பாகவும், பாசமாகவும் வெளிப்படுதலையும் காணமுடியும். ஒருவரையொருவர் உள்ளப்புணர்ச்சியால் அதே இடத்தில் தெளிவுப்பட குறிப்பால் உணர்த்திய விருப்பால் மீண்டும் சந்திக்கின்றனர்.*

*'நாட்ட மிரண்டும் அறிவுடம் படுத்தற்கும்*
*கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்' [ தொல் 1041 ]*

*'அரிவை நாட்டம் அகத்து நிகழ் வேட்கை*
*தெரிய உணர்த்தும் குரிசிற்கு என்ப.' [ நம்பி -அகம்-122 ]*

*உள்ளப் புணர்ச்சியைக் குறிப்புரையால் வெளிப்படுத்தியதை தொல்காப்பியமும், நம்பி அகப்பொருளும் குறிப்பிடுகின்றன. பருவமெய்தியபின் காமம் வெளிப்படும் என்பதை, 'விதி முன்னரே உண்டெனின் தோன்றாது, காலம் பார்த்து அடங்கியிருக்கும், காலமாவது இருவரும் காமநுகர்வதற்குரிய குமரப்பருவம்' என்ற வ.சுப மாணிக்கனாரின் கருத்தும் இதனோடு ஒப்பு நோக்கத்தக்கது.சிறுபருவத்தில் தெருவில் விளையாடியச் சிறுவன் காமப்பருவம் எய்தியநிலையில், தன் இல்லில் நீர் கேட்க, கொடுக்கச் சென்ற இடத்தில் தலைவியின் கையை வருடுகிறான். கூச்சலிட்டவள் அன்னை வினவியதும் விக்கினான் எனக் கூறுகிறாள்.தோழியிடம் அவன் கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கிக் நகைக்கூட்டம் செய்ததை*

*வெளிப்படுத்துகிறாள் [ கலி 51 ]. தலைவனின் விருப்பை அறிந்தவள் தன் விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறாள்.*

*'ஆர நாறும் அறல்போற் கூந்தல்*
*பேரமர் மழைக்கண் கொடிச்சி*
*மூரல் முறுவலோடு மதைஇய நோக்கே' [ குறு 286 ]*

*தலைவியின் புன்னகையோடு பொருந்திய செருக்கிய பார்வையால் உடன்பாட்டுக் குறிப்பைக் கண்டு தலைவன் மகிழ்வுறுவதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.*

***மெய்யுறுப் புணர்ச்சி***

*உள்ளத்தால் ஒன்றியக் காதலர்கள் உடலால் மெய்தொட்டுப்பழகலும், புணர்வதும் மெய்யுறுப்புணர்ச்சியின் தன்மையாகும். இதற்குரிய களமாக பகல் இரவுக்குறி காணப்பட்டது. உள்ளப்புணர்ச்சியில் ஒருவரையொவர் உள்ளத்தில் நினைத்து இன்புற்றவர்கள் மெய்யுறுப் புணர்ச்சியை விரும்புவதில் ஆச்சரியமில்லை. அடிக்கடி நிகழும் கூட்டமும் இதற்கு காரணமாகலாம்.மெய்யுறுப்புணர்ச்சிக்கு உடன்பட்ட தலைவி நாணத்தால் தன்னை நிறைத்துக் கொண்டவளாக உள்ளத்தின் களிப்பை வெளிப்படுத்துகிறாள். எப்போதும் புறத்துச் செல்ல உரிமை பெற்ற தோழியின் உதவி களவில் தேவைப்பட்டது.உரிய பருவமெய்தா பெண்ணால் ஆணின் காதலை ஏற்றுக்கொள்ள இயலுவதில்லை. இதனை கைக்கிளையாகக் குறிப்பிடுவர். கையுறை ஏற்றுக் கொண்ட பின் தோழி குறியிடம் கூற தலைவன் தலைவி சந்திக்கின்றனர். முதல் கூட்டக்களமாக பகல் காணப்பட்டது. இதற்கு அடிப்படையாக அமைந்தது பொருளாதாரக் கட்டமைப்பாகும். பொருளாதாரம் சார்ந்த நிலைகளில் பெண்களே அதிகமாக ஈடுபட்டனர். தங்கள் வாழ்வைக் கட்டமைப்பதற்குரிய அனுபவக் கல்வியை இங்குதான் கற்றுக்கொண்டனர். மெய்யுறுப்புணர்சிக்குப் பிறகே பொலிவுறுகிறாள் தலைவி. இதனை கலித்தொகை 64 முன்வைக்கிறது. தலைவியின் பொலிவிற்கு காரணமென்ன என வினவிய தலைவனிடம் 'உன்னால் நான் பொலிவுறவில்லை, நீ என் தோளில் எழுதிய தொய்யில் தான் பொலிவுற்றது என் முலையால் நின் மார்பிடத்துச் சேரவில்லை' என உரைக்கிறாள். தலைவன் வேறே தோற்றப்பொலிவு பெறப் புணர்வாயாக எனக் கூற தலைவியும் ஆங்கு ஆகுக' என மெய்யுறுப்புணர்ச்சிக்கு உடன்படுகிறாள். பெண் தன் காமவிருப்பை வெளிப்படையாக கூறாமல் குறிப்பால் வெளிப்படுத்துவாள். பெண்ணின் உடன்பாடு இல்லாது மெய்தொடுதல் அறனாகாது. தலைவனோடு கூடியப்பின் உள்ளத்தால் நினைத்து மகிழ்வுறும் ஒருபெண் தலைவன் தனது மேனியை அணைத்து நின்னை நுகர்வேன் எனக்கூற, உள்ளத்தில் மழை பெய்யப்பெற்ற மண் போல நெகிழ்கிறாள். அதை அவன் உணராதவாறு தனக்கு ஒவ்வாத கடியச் சொற்களைக் கூறி விடுத்துக் கொள்கிறாள் [ அகம் 32 ]. தலைவியின் விருப்பத்திற்கு மாறாக தலைவன் செயல் படவில்லை. பெண் தனது காமவிருப்பை எளிதில் வெளிப்படுத்த மாட்டாள். ஆண் காதலையும், காதலையும், காம வேட்கையையும் எளிதாக வெளிப்படுத்தும்*

*தன்மையுடையவன். பருவமுற்ற பிறகு தோற்றப் பொலிவுறும் பெண் தலைவனைக் கூடிய பின் தன்னை அழகுபடுத்துகிறாள். தலைவனைக் காணா நிலையில் துயருறுபவள் அவனைக்காணச் செல்லும்போது கூந்தலில் நறுமணம் பூசி பூச்சூடியும் கண்ணிற்கு மையும் அழகிய தழையாடையும் அணிந்துச் செல்கிறாள். பெண் தன்னை உடைய தலைவனுக்கு அர்பணிக்கும் எண்ணமுடையவளாகக் காணப்படுகிறாள். களவில் தன் விருப்பங்களுக்கும் தன் உணர்வுகளுக்கும் அளிக்கும் முக்கியத்துவத்தை விட தலைவனின் உணர்வுகளை அவனுக்காக தன்னை மாற்றியமைக்கிறாள். கற்பு வாழ்வை போல களவிலும் பருவப் பெண்களின் வாழ்க்கை காணப்படுவதை அகப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.*

*அகவாழ்வில் பெண்ணை முன்னிறுத்திப் பாடப்பட்ட களவுப்படல்கள் ஆணை சார்ந்ததாக அமைகின்றன. பெண்ணிடம் ஆணிற்கு ஏற்படும் காதல் உடல் வனப்பை சார்ந்தும் அவளிடம் துய்க்கும் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும். தலைவன் மார்பில் சாய்ந்து அவன் அன்பை பெற விரும்பும் மீது பெண் அவன் மீது கொண்ட நட்பை உயர்வாக போற்றுபவளாகிறாள்.*

*தலைவனைக் கூடுவதற்கு முன்னரான வாழ்க்கை கடமை சார்ந்து பெண்ணிற்கு காணப் பட்டது. மெய்த்தொட்டுப் பயிறல் தலைவியின் பிரியா மனதிற்கும் வேட்கைக்கும் காரணமாக அமைந்தது தலைவியின் மனம் பகற்குறி மீண்டு திரும்பும் நிலையில் இரவுக் கூட்டத்திற்கும் விருப்பம் கொள்கிறது. இல்லில் உள்ள விருப்பத்தையும் ஆயத்தையும் வெறுக்கும் தலைவி தலைவனுடன் கூடுவதை விரும்புகிறாள். தலைவியின் விருப்பை நிறைவேற்ற தோழியும் இரவுக் கூட்டத்திற்கு தலைவனோடு உடன்படுகிறாள்.*

*'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று*
*நீரிலும் ஆர் அளவின்றே சாரல்' [ குறு 3 ]*

*தேவக்குலத்தாரின் இப்பாடலானது தலைவி தலைவன் மீது கொண்ட நட்பை போற்றுவதாகும். நிலத்தை விட, வானை விட, நீரை விட பெரிதாக காணப்படும் தலைவனின் நட்பு பகல் கழியும் மாலை வேளையில் வெறுமையை ஏற்படுத்துகிறது. காமத்தை விரும்பாது தலைவனோடு கூட வேண்டும் என்ற பெண்ணின் நாட்டம் இரவுக் கூட்டத்தை நாடுகிறது. இரவு இல்லின் காவலைக் கடந்தும் அன்னையின் கடுங்காவலைக் கடப்பது சாதாரணமன்று.*

**தொகுப்புரை**

*மேற்கண்ட தரவுகளின் வழியாக சங்க அகப்பாடல்கள் பருவ பெண்களின் களவு காதல் வாழ்க்கையின் துவக்கம் உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுப்புணர்ச்சி வழிநின்று அவர்கள் உள்ள உணர்வை வெளிப்படுத்துகிறது. பழங்கால மக்களின் வாழ்வியலைப் பேசும் சங்கப்பாடல்கள் ஆண்பெண் சமநிலைத்தன்மையை வெளிப்படுத்தவில்லை. பெண்களின் வாழ்க்கை ஆணின் வாழ்க்கைக்கு எதிரானதாகவே காணப்பட்டது. களவு இன்பத்திலும் பெண் ஆணை*

சார்ந்தவளாகவும், ஆணிற்காக வாழும் தன்மையுடையவளாகவும் காணப்படுகிறாள்.களவில் கூடிச்சென்றத் தலைவன் மறுநாள் வரும் வரை அச்சத்துடன் காணப்படும் பெண்ணின் மன உணர்வே மேலோங்கி நிற்கிறது. ஆண் காம விருப்புடையவனாகவும் , பெண் அவன் அன்பிற்காக தவிக்கும் நிலையைக் காணமுடிகிறது. களவில் கூடி இன்புற்ற மெய்யுறுப் புணர்ச்சியே பெண்ணின் வரைவு ஏக்கத்திற்குக் காரணமாகிறது. யாரும் காணாது புணர்ந்துச் சென்ற தலைவன் வராதுபோயின் என்ன செய்வது என்ற அச்ச உணர்வு தலைவனை வரைய வலியுறுத்தக் காரணமானது என்பது தெளிவாகிறது.

**துணைநூற்பட்டியல்-**


1. நம்பி அகப்பொருள் விளக்கம், ச. திருஞானசம்பந்தம், கதிர்பதிப்பகம், திருவையாறு.
2. தொல்காப்பியப் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சாதாபதிப்பகம், சென்னை.
3. குறுத்தொகை II, நியூ செஞ்சுரி புக்கவுஸ், சென்னை
4. கலித்தொகை, நியூசெஞ்சுரி புக்கவுஸ், சென்னை
5. குறுந்தொகை I, நியூசெஞ்சுரி புக்கவுஸ், சென்னை
6. தமிழ்க்காதல், வ.சுப. மாணிக்கனார், சாரதாபதிப்பகம்
7. சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள் டாக். மு.பொன்னுசாமி, இந்து பதிப்பகம், கோயம்புத்தூர்.